# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.165/மா/2025
நாள் 25.09.2025

திரு . S. அன்பழகன் — முறையீட்டு மனுதாரர்
துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

ஆணையர் — எதிர் மனுதாரர்
காஞ்சிபுரம் மாநகராட்சி

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் (ம) வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண் 155 என்கிற முகவரியில் வசிக்கும் S. அன்பழகன் என்பவரின் 22.04.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 23.04.2025 அன்று பெறப்பட்டு 165/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் (அஞ்சல் (ம) வட்டம்), முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண் 155 என்கிற முகவரியில் வசிக்கும் S. அன்பழகன் என்பவர் தனது 22.04.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“தமிழகத்தில் பழமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்ற விதியை மீறி 8, உலகளந்தார் மாடவீதியில் உலகளந்தார் பெருமாள் கோயிலிலிருந்து 50 மீ. தூரத்திலும், காமாட்சி அம்மன் கோயிலிலிருந்து 200 மீ. தூரத்திலும், முக்தேஸ்வரர் கோயிலிலிருந்து 200 மீ தூரத்திலும், வைகுண்ட பெருமாள் கோவிலிலிருந்து 1/2 கிலோ மீட்டர் தூரத்திலும், சுமார் 20 மீட்டர் உயரத்திற்கு மேல் விதியை மீறி சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள காஞ்சி காமாட்சி ரெசிடென்சி கட்டிடத்தை ஆய்வு செய்து 9 மீட்டர் உயரத்திற்கு மேல் உள்ள கட்டிடத்தை அகற்ற வேண்டி நான் கடந்த 26.02.2025 இல் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு புகார் அனுப்பி அதன் நகல் நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனருக்கும் அனுப்பினேன். (மாநகராட்சி

ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகல் தங்களின் மேலான பார்வைக்கு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது).

நான் அனுப்பிய புகாரை மாநகராட்சி ஆணையர் 28.02.2025 இல் பெற்று கொண்டதாக ஒப்புகை சான்று வந்துள்ளது. அதுபோல நகராட்சி நிர்வாக இயக்குனர், நகராட்சி மண்டல இயக்குனரும் பெற்றுக் கொண்டதாக ஒப்புகை சான்று வந்துள்ளது.

நான் மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகாரிலேயே மிக தெளிவாக தமிழகத்தில் பழமையான கோவில்கள் கோபுரங்கள் உள்ள பகுதிகளில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்ற விதியை மீறி 108 திவ்விய தளங்களில் ஒன்றான உலகளந்தார் பெருமாள் கோயிலிலிருந்து 50 மீ. தூரத்திலும், பல்லவர் காலத்து கோவிலான முக்தேஸ்வரர் கோயிலிலிருந்து 200 மீட்டர் தூரத்திலும், காஞ்சி காமாட்சி அம்மன் கோவிலிலிருந்து 200 மீ. தூரத்திலும், பல்லவர் காலத்து கோவிலான வைகுண்ட பெருமாள் கோவிலிலிருந்து 1/2 கிலோ மீட்டர் தூரத்திலும், சுமார் 20 மீட்டர் உயரத்திற்கு மேல் சட்ட விரோதமாக காஞ்சி காமாட்சி ரெசிடென்சி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதை குறிப்பிட்டிருந்தேன். மேலும் அரசாணை எண்.139 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 10.5.2002, காஞ்சிபுரம் முழுமைத் திட்டத்தின்படி PROTECTED MONUMENTS UNDER THE ANICIENT MONUMENTS AND ARCHEOLOGICAL SITES AND REMAINS ACT 1958–இல் அறிவிப்பு செய்யப்பட்டபடி உலகளந்தார் பெருமாள் கோவில், காமாட்சி அம்மன் கோவில், முக்தேஸ்வரர் கோவில், வைகுண்ட பெருமாள் கோவில் ஆகிய கோவில்களுக்கு 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் கட்டிட உயர வரம்பு 9 மீட்டர் ஆகும். ஆனால், 1/2 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 20 மீட்டர் உயரத்தில் விதிமீறி காஞ்சி காமாட்சி ரெசிடென்சி கட்டி இருப்பது மிகப் பெரிய அளவில் ஊழல் நடந்துள்ளதோ என்கிற சந்தேகத்தையும், உரிய நேரத்தில் மாநகராட்சி ஆய்வு செய்யவில்லை என்பதையும் என் புகாரில் குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் கோவிலை சுற்றி இது போல் விதிமீறல் கட்டிடங்கள் தொடர்பான வழக்கில் விதிகளை மீறி கட்டிடம் கட்டும் வரை நடவடிக்கை எடுக்காமல் இருந்த திருச்சி மாநகராட்சி ஆணையரை நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதையும் ஆணையருக்கு சுட்டி காட்டி இருந்தேன்.

மேலும் திருச்சி அடுக்குமாடி குடியிருப்பு வழக்கில் விதிமீறி கட்டிடம் கட்டும் வரை நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்த திருச்சி மாநகராட்சி ஆணையர் உட்பட அனைத்து அதிகாரிகளின் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததையும் என் புகாரிலேயே ஆணையருக்கு சுட்டி காட்டி இருந்தேன். மேலும் பொது மக்கள் கொடுக்கும் புகார் மனு மீது 30 நாட்களுக்குள் நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தினை புகார்தாரருக்கு வழங்க வேண்டும் என்று தலைமை செயலாளர் அனுப்பிய சுற்றறிக்கையின்படி விதிமீறி கட்டப்பட்டுள்ள காஞ்சி காமாட்சி ரெசிடென்சி கட்டிடத்தை இட நேராய்வு செய்து 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டி உள்ள கட்டிடத்தை இடித்து அதன் விவரத்தினை வழங்குமாறும் ஆணையருக்கு புகாரிலேயே தெரிவித்திருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரில் அனைத்து அம்சங்களையும் விளக்கி தகுந்த ஆதாரங்களுடன் புகார் கொடுத்தும் இதுவரை மாநகராட்சி ஆணையர் என் புகார் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதை பார்த்தால் விதிமீறி கட்டப்பட்டுள்ள

காஞ்சி காமாட்சி ரெசிடென்சி நிர்வாகியிடம் லஞ்சம் பெற்றுள்ளாரோ என்கிற வலுவான சந்தேகம் ஏற்படுகின்றது.

தர்மம் அழிந்து எங்கெல்லாம் அதர்மம் தலை தூக்குகின்றதோ அங்கெல்லாம் தர்மத்தை காப்பாற்ற கண்ணன் அவதரிப்பதாக புராணத்தில் கூறப்பட்டுள்ளது. கண்ணன் நேரில் வரமுடியாத காரணத்தினால் தான் மாண்புமிகு தங்களை போன்று சத்தியம் தவறாத நேர்மையான அதிகாரியை நியமித்து உள்ளார் என்று சொன்னால் அது மிகையல்ல என்று கருதுகின்றேன். எனவே சத்தியம், தர்மம், நேர்மை, நியாயம் இவற்றின் வழியில் கடமை புரியும் மதிப்புக்கு மேலான தாங்கள் விதிமீறிய காஞ்சி காமாட்சி ரெசிடென்சி கட்டடத்தின் மீது நடவடிக்கை எடுக்காத காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து விதிமீறிய காஞ்சி காமாட்சி ரெசிடென்சி கட்டிடத்தை இடிக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்றநடுவ 23.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் காஞ்சிபுரம் ஆணையரிடம் கோரப்பட்டது.

3. காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க. எண் 4165/2025/எப்1, நாள் 18.06.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

“காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கதவு எண் 8, உலகளந்த மாட தெரு, வார்டு எண் 4, பிளாக் எண் 10, நகரளவு எண் 759/1A–ல் உள்ள தங்கும் விடுதி வணிக கட்டிடம் பார்வையிடப்பட்டது. மேற்படி இடத்தில் கடந்த 2000 ஆம் ஆண்டு நகராட்சி அனுமதி பெறாமல் 18.9 மீ X 8.5 மீ நீள அகலத்தில் தரை மற்றும் முதல் தளம் வணிக பயன்பாடு R.C.C. கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் கட்டிட உரிமையாளரின் மேற்படி கட்டிடத்தின் கட்டிட அனுமதி கோரிய விண்ணப்பம் 02.05.2000 ஆம் ஆண்டு கட்டிட அனுமதி மறுத்து திருப்பப்பட்டது. இந்நிலையில் மேற்கண்ட கட்டிட உரிமையாளர் 2024 ஆம் ஆண்டு அனுமதி பெறாமல் இரண்டாம் மற்றும் மூன்றாம் தளம் வணிக பயன்பாடு கட்டடம் கட்டியுள்ளார்.

மேலும் மேற்கண்ட கட்டிடத்தின் மீது மேல் நடவடிக்கை தொடர தொடர்ச்சியாக நகரமைப்பு பிரிவில் சுமார் ஆறு மாத காலமாக பணியிடம் காலியாக இருந்த நிலையில், தொடர் நடவடிக்கை எடுக்க இயலவில்லை. தற்போது மேற்கண்ட கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135/1–ன் கீழ் அனுமதியற்ற கட்டுமானத்திற்காக அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் மேற்கண்ட கட்டிடத்திற்கு அனுமதி மறுக்கப்பட்ட நகல் மற்றும் அனுமதியற்ற கட்டிடத்தின் மீது வழங்கப்பட்ட அறிவிப்பு நகல் இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பித்துக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

4. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவத்தில் 24.06.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 24.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“தமிழகத்தில் பழமையான கோவில்கள், கோபுரங்கள் உள்ள பகுதியில் 1 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் 9 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என்ற விதியை மீறி 8, உலகளந்தார் மாடவீதியில் உலகளந்தார் பெருமாள் கோயிலிலிருந்து 50 மீ. தூரத்திலும்,

காமாட்சி அம்மன் கோயிலிலிருந்து 200 மீ. தூரத்திலும், முக்தேஸ்வரர் கோயிலிலிருந்து 200 மீ தூரத்திலும், வைகுண்ட பெருமாள் கோவிலிலிருந்து 1/2 கிலோ மீட்டர் தூரத்திலும், சுமார் 20 மீட்டர் உயரத்திற்கு மேல் விதியை மீறியும், மேலும் அரசாணை எண்.139 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 10.5.2002—ன்படியும், காஞ்சிபுரம் முழுமைத் திட்டத்தின்படி PROTECTED MONUMENTS UNDER THE ANICIENT MONUMENTS AND ARCHEOLOGICAL SITES AND REMAINS ACT 1958—ன்படியும் சட்டத்திற்கு புறம்பாக காஞ்சி காமாட்சி ரெசிடென்சி கட்டி இருப்பது மிகப் பெரிய அளவில் ஊழல் நடந்துள்ளது என்று அறிய முடிகிறது.

எனவே விதிமீறிய காஞ்சி காமாட்சி ரெசிடென்சி கட்டடத்தின் மீது நடவடிக்கை எடுக்காத காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து விதிமீறி கட்டப்பட்ட காஞ்சி காமாட்சி ரெசிடென்சி கட்டிடத்தை இடிக்க நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

6. காஞ்சிபுரம் மாநகராட்சி உதவி பொறியாளர் (திட்டம்) 24.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கதவு எண் 8, உலகளந்த மாட தெரு, வார்டு எண் 4, பிளாக் எண் 10, நகரளவு எண் 759/1A—ல் உள்ள தங்கும் விடுதி வணிக கட்டிடம் பார்வையிடப்பட்டது. மேற்படி இடத்தில் கடந்த 2000 ஆம் ஆண்டு நகராட்சி அனுமதி பெறாமல் 18.9 மீ X 8.5 மீ நீள அகலத்தில் தரை மற்றும் முதல் தளம் வணிக பயன்பாடு R.C.C. கட்டிடம் கட்டப்பட்டது. மேலும் கட்டிட உரிமையாளரின் மேற்படி கட்டிடத்தின் கட்டிட அனுமதி கோரிய விண்ணப்பம் 02.05.2000 ஆம் ஆண்டு கட்டிட அனுமதி மறுத்து திருப்பப்பட்டது. இந்நிலையில் மேற்கண்ட கட்டிட உரிமையாளர் 2024 ஆம் ஆண்டு அனுமதி பெறாமல் இரண்டாம் மற்றும் மூன்றாம் தளம் வணிக பயன்பாடு கட்டடம் கட்டியுள்ளார்.

மேலும் மேற்கண்ட கட்டிடத்தின் மீது மேல் நடவடிக்கை தொடர தொடர்ச்சியாக நகரமைப்பு பிரிவில் சுமார் ஆறு மாத காலமாக பணியிடம் காலியாக இருந்த நிலையில், தொடர் நடவடிக்கை எடுக்க இயலவில்லை. தற்போது மேற்கண்ட கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135/1—ன் கீழ் அனுமதியற்ற கட்டுமானத்திற்காக அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், அனுமதியற்ற கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள வழிகாட்டுதலின்படி, மேற்கண்ட கட்டிடத்தின் மீது உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம், காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் (திட்டம்) வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

காஞ்சிபுரம் மாநகராட்சி, உலகளந்த மாட தெரு, கதவு எண் 8—ல் விதி மீறி கட்டப்பட்டுள்ள காஞ்சி காமாட்சி ரெசிடென்சி கட்டடம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தை மனுதாரர் கோரியுள்ளது, மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வழியாக அறிய முடிகிறது.

காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கதவு எண் 8, உலகளந்த மாட தெரு, வார்டு எண் 4, பிளாக் எண் 10, நகரளவு எண் 759/1A–ல் உள்ள தங்கும் விடுதி வணிக கட்டிடம் பார்வையிட்டதில், கடந்த 2000 ஆம் ஆண்டு நகராட்சி அனுமதி பெறாமல் 18.9 மீ x 8.5 மீ நீள அகலத்தில் தரை மற்றும் முதல் தளம் வணிக பயன்பாடு R.C.C. கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், கட்டிட உரிமையாளரின் மேற்படி கட்டிடத்தின் கட்டிட அனுமதி கோரிய விண்ணப்பம் 02.05.2000–ல் அனுமதி மறுத்து திருப்பப்பட்டது என்பதும், இந்நிலையில் கட்டிட உரிமையாளர் 2024 ஆம் ஆண்டு அனுமதி பெறாமல் இரண்டாம் மற்றும் மூன்றாம் தளம் வணிக பயன்பாடு கட்டடம் கட்டியுள்ளார் என்பதும், மேற்கண்ட கட்டிடத்தின் மீது மேல் நடவடிக்கை தொடர நகரமைப்பு பிரிவின் பணியிடம் தொடர்ச்சியாக சுமார் ஆறு மாத காலமாக காலியாக இருந்த நிலையில், தொடர் நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்பதும், தற்போது மேற்கண்ட கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 135(1)–ன் கீழ் அனுமதியற்ற கட்டுமானத்திற்காக அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதும், அனுமதியற்ற கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள வழிகாட்டுதலின்படி, மேற்கண்ட கட்டிடத்தின் மீது உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் (திட்டம்) வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், கட்டிட உரிமையாளர், தங்கும் விடுதி வணிக கட்டிடமான காஞ்சி காமாட்சி ரெசிடென்சினை கடந்த 2000 ஆம் ஆண்டு நகராட்சி அனுமதி பெறாமல் 18.9 மீ x 8.5 மீ நீள அகலத்தில் தரை மற்றும் முதல் தளம் வணிக பயன்பாடு R.C.C. கட்டிடம் கட்டி விட்டு, மேற்படி கட்டிடத்தின் கட்டிட அனுமதி கோரிய விண்ணப்பம் மறுத்து திருப்பப்பட்ட நிலையில் கட்டிட உரிமையாளர் 2024 ஆம் ஆண்டு அனுமதி பெறாமல் இரண்டாம் மற்றும் மூன்றாம் தளம் வணிக பயன்பாடு கட்டடம் கட்டியுள்ளார். காஞ்சி காமாட்சி ரெசிடென்சி உரிமையாளர் 2024 ஆம் ஆண்டு அனுமதி பெறாமல் இரண்டாம் மற்றும் மூன்றாம் தளம் கட்டியதை உரிய நேரத்தில் கள ஆய்வு செய்யாமல் காலம் கடந்து அக்கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 135(1)–ன்கீழ் 12.06.2025 நாளிட்ட தாக்கீது வழங்கியுள்ளது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இதன் பேரில் தக்க துறை நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

மேலும், இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு, "The Anicient Monuments and Archaeological Sites and Remains Act, 1958, பிரிவு 20A"–ல் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

> 20A. Declaration of prohibited area and carrying out public work or other works in prohibited area:—Every area, beginning at the limit of the protected area or the protected monument, as the case may be, and extending to a distance of one hundred metres in all directions shall be the prohibited area in respect of such protected area or protected monument:

எனவே, காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கதவு எண் 8, உலகளந்த மாட தெரு, வார்டு எண் 4, பிளாக் எண் 10, நகரளவு எண் 759/1A–ல் இயங்கி வரும் காஞ்சி காமாட்சி ரெசிடென்சி அமைந்துள்ள இடத்தினையும், மேற்கண்ட கட்டிடத்தையும் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டு, அக்கட்டிடம் மேற்கண்ட சட்டப்பிரிவின் வரையறைக்குள் அமைய பெற்றுள்ளதா என்பதை கண்டறிந்து, அதன் அடிப்படையில் உச்சநீதி மன்ற, உயர்நீதி மன்ற

அறிவுரைகளை நினைவில் கொண்டு, உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. S. அன்பழகன்,
155, அசோக்நகர், முசிறி மெயின் ரோடு,
துறையூர் (அஞ்சல் (ம) வட்டம்),
திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621 010.

(2) ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி,
காஞ்சிபுரம்.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

26/9/25
செயலாளர்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032